Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாலபெட்டி எண். 49 — மலர் 10
போன் 389 — National Tamil Daily — இதழ் 34 — தேசிய தினசரி

[illegible] பங்குனி 2 [illegible] 15 வெள்ளிக்கிழமை (15-3-68)

போன்: 7190
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# காங்கேசன் துறையில் சீமெந்து உற்பத்தி அதிகரிக்கப்படும்

## 1970-ல் புத்தளத்திலும் தொழிற்சாலை இயங்கும்

## தட்டுப்பாட்டை நீக்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை

காங்கேசன்துறை, வியா
நாட்டில் ஏற்பட்டுள்ள சீமெந்துத் தட்டுப்பாட்டை ஓரளவு நீக்குவதற்கு சீமெந்து கூட்டுஸ்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்போது தினம் 600 தொன் சூளைவேலை நடைபெறும் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் விரைவில் தினம் 1000 தொன் சூளை வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் இவ்வாற இறுதியில் அவசரத் தட்டுப்பாட்டைத் தவிர்ப்பதற்கு 16 ஆயிரம் தொன் சீமெந்து ரஷ்யாவிலிருந்து இலங்கைவந்து சேரவிருக்கிறது.

1970-ம் ஆண்டில் புத்தளத்தில் சீமெந்து உற்பத்தித் தொழிற்சாலை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1967-ம் ஆண்டு ரூபா 27, 40, 2320 [illegible] இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபனத்தின் மொத்த விற்பனவாக கணக்கிடப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## 'யாழ். பல்கலைக்கழகம்: இனியும் தாமதம் வேண்டாம்'

யாழ்ப்பாணம், வெள்ளி
வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் புதுக் கட்டடத் திறப்புவிழாவும், வெற்றோர் தின வைபவமும் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எம். பி. புதுக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

கல்லூரிச் சந்தியிலிருந்து திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். கல்லூரி அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பேசுகையில் தெரிவித்ததாவது:

இலங்கையிலுள்ள கல்வி மான்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்களாகும். இங்கு ஒரு சர்வகலாசாலை இல்லாதது மிகவும் மனம்

(6-ம் பக்கம் பார்க்க)

## "கல்வி குழப்ப நிலைக்கு மந்திரி தான் காரணம்"

**— ஜி. ஜி. பொன்னம்பலம்**

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்துக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமை வகித்துப் பேசுகையில் தற்போதைய கல்வி குழப்ப நிலைக்கு கல்வி மந்திரிதான் காரணம் என்று குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"தற்போதைய கல்வி குழப்பநிலைக்கு மந்திரியே காரணம். தேசிய அரசாங்கத்துக்கு ஏதும் நெருக்கடி ஏற்பட்டிருக்குமேயானால் அதற்கான முழுப் பொறுப்பும் கல்வி மந்திரியையே சாரும். தமிழ்ப் பிள்ளைகளின் தரத்தைக் குறைக்க அவர்செய்யும் சூழ்ச்சி பலிக்காது. பல்கலைக்கழகத்துக்கு அநேகமான தமிழ்ப் பிள்ளைகள்போவதாலேயே தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றும் விஞ்ஞான ஆசிரியர்களைத் தென்னிலங்கைக்கு மாற்றுகிறார். இது அவர் வைத்திருக்கும் தப்பான மதிப்பீடாகும். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் நிலைமை மிகவும் சீர்கேடாக உள்ளது. கட்டிடங்களைப் பொறுத்தவரை மகாவித்தியாலயக் கட்டடங்கள்கூட நல்லதரத்தில்லை. [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

## திருமண அழைப்பு

ஜனநாயகம் — அரவிந்தாதேவி

இடம் - வெள்ளவத்தை மாணிக்கவிநாயகர்கோவில்.

காலம்- சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில்.

உறவினர்கள், நண்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

குறிப்பு:- தெல்லிப்பளையிலுள்ள மணமகன் இல்லத்தில் மார்ச் 17 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிமுதல் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

சிவமன்றம்,
489 தெல்லிப்பழை.

## நீதிபதிக்கு உபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி
சென்ற ஐந்து வருடங்களாக யாழ்ப்பாண மாவட்ட கூட்டு நீதிபதியாகக்கடமையாற்றி நீர்கொழும்புக்கு மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வுடன் மாற்றலாகிச் சென்ற திரு. ஜி. சி. நைல்ஸுக்கு யாழ். மாவட்ட நீதிமன்ற நலன் புரிச்சங்கத்தினரால் நீதிமன்றமண்டபத்தில் ஒரு தேநீர் விருந்தளிக்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு நீதிமன்ற சங்கடத்தார் திரு. எஸ். வேலாயுதர் தலைமைதாங்கினர். திரு நைல்ஸின் நீதிபரிபாலன திறமை பற்றி பலர் பாராட்டிப் பேசினர். திரு. நைல்ஸ் நன்றி கூறினார்.

## மருந்துகள் பாதுகாப்பதற்கு நிபுணர் கூறும் யோசனை

மருதானை, வியாழன்
மருந்து வகைகளை பாதுகாப்பாக வைத்து அவற்றின் தரத்தை நிர்ணயிப்பது அவசியமெனவும் அப்படியானால் தான் மருந்து வகைகளினால் சரியானபலன் கிட்டுமென்றும் மேற்கத்தய தேசமொன்றைச் சேர்ந்த டாக்டர் பெஜட் தெரிவித்தார்.

மருந்து தயாரிக்கும் கம்பெனியொன்றின் நிர்வாக அதிபரும் மருந்து உற்பத்தித்துறையில் 15 வருடகால ஆராய்ச்சிசெய்து அனுபவம் பெற்றவருமான டாக்டர் பெஜட் கொழும்பு வைத்தியக் கல்லூரியில் உரை நிகழ்த்திய போது மேற்கண்டவாறு கூறினார்.

மருந்து தயாரிப்புதொழில் மீது ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் கட்டுப்பாடு விதிக்கவேண்டும் என்றும் இல்லையேல் கவலையீனம் காரணமாக நோயாளிகளின் உயிருக்கே பெரும்ஆபத்து வருமெனவும் டாக்டர் பெஜட்டோ பேசுகையில் கூறினர்.

மருந்துகளை தயாரித்த பிறகு அவற்றை முதலில் நன்கு பரிசோதனை செய்து தயாரிப்பாளர்கள் திருப்தியடைந்த பின்னர்தான் விற்பனைக்கு விடவேண்டுமென குறிப்பிட்டடாக்டர்பெஜட் மருந்துகளை பதுக்கிவைப்பது தடுக்கப்பட வேண்டுமெனவும் அதனால் மருந்துகள் பழுதாகிவிடுமெனவும் கூறினர்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி
நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 185-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

முதலாவது பரிசு
17 O 0013 ரூ. 100,000

இரண்டாவது பரிசு
47 V 0993 ரூ. 40,000

மூன்றாவது பரிசு
13 V 0579 ரூ. 10,000

தலா 962 ரூபா 80 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 41 N 0439 | 29 G 0516 |
| 24 J 0592 | 17 V 0093 |
| 49 H 0077 | 33 C 0760 |
| 37 K 0775 | 02 L 0573 |
| 33 B 0140 | 45 R 0201 |
| 29 M 0246 | 18 Z 0100 |
| 27 O 0897 | 34 X 0386 |
| 25 X 0519 | 05 T 0926 |
| 29 V 0227 | 13 X 0218 |
| 45 S 0506 | 34 F 0624 |
| 08 A 0076 | 19 R 0415 |
| 32 T 0076 | 14 S 0199 |
| 15 M 0654 | 43 F 0990 |

(6-ம் பக்கம் பார்க்க)

## அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம்

### இந்தியப் பிரதமர் இந்திரா அதிருப்தி



புதுடில்லி, மார்ச் 14
ஜெனீவா ஆயுதபரிகரண மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அணு ஆயுத பரவல் தடை நகல் ஒப்பந்தம்பற்றி இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இன்று இந்திய லோகசபையில் கவனஈர்ப்புக் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் அணு ஆயுத உற்பத்திசெய்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மாணவனது அன்றாட வாழ்க்கையும் குற்ற மற்றதாய் இருக்க வேண்டும். சுத்தமான மனம் உள்ளவன்தான் உண்மையான ஆனந்தத்தை அனுபவிக்க முடியும்.

— மகாத்மாகாந்தி


ஈழநாடு

Ceylon's National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 2ம்திகதி [15-3-68]


## வெளிநாட்டு உதவி

இலங்கைக்கு இருபத்தைந்து கோடி ரூபாய் வெளிநாட்டு உதவி கிடைக்கவிருக்கிறது. இது தவிர அமெரிக்கா உணவுப் பொருள் சிலவற்றையும் உதவியாகக் கொடுக்கவிருக்கிறது. வெளிநாட்டு உதவியையே நமது நாடு நம்பியிருப்பது நல்லதல்லவென்றாலும் நாட்டின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவி பயன்பட்டால் அதனால் ஓரளவாவது நல்ல பலன் கிடைக்காமல் போக முடியாது.

புத்தளத்தில் நிறுவப்படும் இரண்டாவது சீமெந்துத் தொழிற்சாலை, ரசாயன உரத் தொழிற்சாலை, இரண்டாவது காகித உற்பத்தித் தொழிற்சாலை, இரண்டாவது ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை ஆகிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுமென்றும் கூறப்படுகிறது. இலங்கையின் பொருளாதார விருத்திபற்றி உலக வங்கி சமர்ப்பித்த அறிக்கைக்குப் பின்னரே இலங்கைக்கு 25 கோடி ரூபாய் உதவியளிக்க அந்த நாடுகள் முடிவு செய்தன. சீமெந்து, கடதாசி, ரசாயன உரம் முதலிய கனரகத் தொழிற்சாலைகளை அமைப்பது அபிவிருத்தியடைந்துவரும் ஒரு நாட்டுக்கு அவசியம்தான். அதிலும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தீவிர முயற்சி செய்யப்படும்போது விளைச்சலைப் பெருக்குவதற்கு நவீன ரசாயன உரவகைகள் தேவையாகும். எனவே இங்கு நவீன ரசாயன உரத் தொழிற்சாலை நிறுவ எடுக்கும் முயற்சி வரவேற்கத்தக்கது.

சிமெந்து, கடதாசி, உருக்கு, உரம் முதலானவைகளை உற்பத்தி செய்யக்கூடிய கனரகத் தொழில்களை ஆரம்பிக்கும் அதேசமயம் சிறுகைத்தொழில்களிலும் குடிசைக் கைத்தொழில்களிலும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். கனரகத் தொழிற் உற்பத்தியைப் பெருக்கலாம். ஆனால் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு அது உதவி புரியாது. சிறுகைத்தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களுமே வேலை வாய்ப்பளிப்பதுடன் மக்களுக்கு வருவாயும் தேடிக் கொடுக்கும்.

வெளிநாட்டு உதவி இதற்கு முன்னரும் கிடைத்திருக்கிறது. கிடைத்த உதவிகளையெல்லாம் நாம் சரிவரப் பயன்படுத்தவில்லையென்ற குறையுமிருக்கிறது. வெளிநாட்டு உதவியை எந்தெந்தத் திட்டத்துக்கு எப்படி எப்படி உபயோகிப்பது என்பது பற்றியும் கனரகத் தொழிலுடன் சிறுகைத் தொழில்களுக்கு எப்படி உதவியும் ஊக்கமும் அளிப்பதென்பது பற்றியும் ஒருமுகப்படுத்தப்பட்ட விரிவான திட்டம் வகுத்துச் செயல்படுத்த வேண்டியது அவசியம்.

# 'கல்வியை உயிராகப் பேணி வளர்த்தவர்கள் யாழ். மக்கள்'

## பரிசளிப்பு விழாவில் எஸ். ஜே. வி.

அளவெட்டி, வியாழன்

'பண்டைக்காலந்தொட்டு கல்வி நிலையங்களைக் காத்து வளர்த்து கல்வியை தமது உயிர்போல் பேணிவளர்த்து வந்தவர்கள் நமது யாழ்ப்பாண மக்கள். அவர்கள் நிறுவிய பாடசாலையின் வளர்ச்சிக்குளமது பணியைத் தளரவிடாது பாடசாலைகள் எங்களுடையது எனக் கருத வேண்டும். இப்பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க தரம் உயர்த்தவேண்டுமானால் இம்முயற்சிக்கு இப்பகுதி பெற்றோர்கள் முழுமனதுடன் பூரணஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும். நானும் இப்பாடசாலைதரம் உயர்வதற்கு ஒத்துழைத்து ஏற்ற நடவடிக்கை எடுப்பேன்'.

இவ்வாறு காங்கேசன் துறை எம். பி. யும்தமிழரசுக் கட்சித்தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர்சங்க வருடாந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டபத்தில்பாடசாலை அதிபர் திரு. சு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில், 'கல்வி அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுத்த வாக்குறுதிப்படி பாடசாலைகளின் தரம் குறைக்கப்படமாட்டாது. இலங்கை முழுவதும் கல்வி இலாகா செலவு செய்யும் பெருந்தொகையான பணத்தில் ஓர் சிறு தொகையான பணமே உங்கள் கல்லூரிக்கு கிடைக்கின்றது. மிகுதியான அத்தியாவசியமான ஆக்கபூர்வ வேலைகளுக்கு இப்பகுதி மக்களும், பெற்றோர்களும், பழைய மாணவர்களும் நிதி



உதவ முன்வரவேண்டும் என்று கூறினார்.

செனட்டர் சு. நடராஜா பேசுகையில், "தமிழ் மக்கள் கல்வியில் வாஞ்சை கொண்டவர்களாக இருந்தபடியால்தான் கல்விக் கூடங்களை அமைத்தார்கள். ஆகவே தமிழ் பிரதேசத்தில் உள்ள கல்விக் கூடங்களை அரசாங்கம் தரம் குறைக்க ஒருபோதும் நாம் விடமாட்டோம். பாடசாலைகளை திறம்பட நடாத்துவதுதான் ஆசிரியர்கள் கடமை" என்றார்.

வழக்கறிஞர் திரு. சீ. ஜெயபாலசிங்கம் பேசுகையில், "மாணவர்கள் முதியோர்களையும், பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் மதித்து நடக்க வேண்டும்" என்றார்.

## ஆத்மா அழியாது

மருதானை, வியாழன்

பகவத் கீதையைப் பின்பற்றி ஆத்மீக சுத்திகரிப்பை அடைய வேண்டுமென வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பேசிய திரு. ஹரிஹர ஐயர் கூறினார்.

இவ்வுலகில் வாழும் மனிதர்களுடைய உடல்தான் அழிந்து விடுமேயொழிய அவர்களின் ஆத்மாக்கள் அழிந்துவிடாது எப்போதும் நிரந்தரமாக இருக்குமெனவும் ஆகவே அந்தாத்மாக்களுக்கு சாந்தியளிக்கக் கூடியமதக் கோட்பாடுகளை மனிதர்கள் பின்பற்ற வேண்டுமெனவும் திரு. ஹரிஹரஐயர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

இடைக்கால வாழ்க்கையான இவ்வுலகத்தில் இருக்கும்காலத்தில் மனிதன் தன் ஆத்மாவுக்கு சாந்தியளிக்கக் கூடிய வழிகளில் இறங்க வேண்டுமெனவும் அவர் சொன்னார்.

## இன்றைய பலன்

[15-3-68]

வெள்ளிக்கிழமை

[பங்குனி மீ [2 உ]

திதி- பிரதமை இரவு 11-27 மேல் துதிகை

நட்சத்திரம்- உத்தரம் மாலை 4-44 மேல் அத்தம்

ராகுகாலம்-10-51— 12-21

சுபநேரம்- 6-21 — 7-51

இன்று பிறந்தவர்களுக்கு எண்ணம்போல் வாழ்வு மலர்ந்து இனிய மணம் பரப்பும். காதலரின் வாழ்வில் உவக்கைக்கும், உல்லாசத்துக்கும் இடமுண்டு. சிலர் வாழ்வில் நீண்டநாள் கனவு இவ்வாண்டு நனவாகலாம். உடல்நலத்தைப் பாதிக்கக்கூடிய நிலை ஏற்படாமல் உழைப்புக்கேற்ற ஓய்வையும் பயன்படுத்திக் கொள்ளவும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது விரும்பத்தக்கது.

மேஷம்- பணம் பாழாகும், முன் யோசனை நன்று.

ரிஷபம்- பொதுத் தொண்டில் ஆர்வம்.

மிதுனம்- இடமாற்றம் வரின் இன்முகத்துடன் ஏற்க.

கடகம்- நிமிர்ந்த நடை நிதானப்போக்கு.

சிம்மம்- பொருள்முடை பொறுமைக்குச்சோதனை.

கன்னி- குரங்குமனம், குறுக்குவழி தவிர்.

துலாம்- நகைவரவு, நகைச்சுவையுண்டு.

விருச்சிகம்- கானல்நீர் கவர்ச்சியை நம்பாதே.

தனுசு- நலிவு மடியும், இன்று நல்லநாள்.

மகரம்- குற்றால அருவி போல் வற்றாத இன்பம்.

கும்பம்- வேதனைச் செய்தி விழிகள் குளமாகும்.

மீனம்- சுற்றம் சூழும், சுபநாள்.

சொத்துக்களைக்காத்த திருமலில் வேலுப்பிள்ளை

## பொலிஸ் அதிபர் யாழ். வருவார்

குரும்பசிட்டி, வியா

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலிக்அபயகுணவர்த்தன, இராணுவத் தலைபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகல, கடற்படை கமாண்டர் திரு. ராஜன் கதிர்காமர் ஆகியோர் அடுத்தவாரம் உத்தியோக ரீதியில் யாழ்ப்பாணம் வருவார்கள் என அறியப்படுகிறது.

## பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை குடும்பக்கட்டுப்பாடு சங்கத்தினரின் ஆதரவில் இம்மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பொருட் காட்சியை அன்றையதினம் மாலை 3 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா திறந்து வைப்பார்.

இதேதினம் மாலை 6 மணிக்கு நிகழவிருக்கும் பகிரங்க கூட்டத்தில் சர்வதேசக் குடும்பக் கட்டுப்பாடுசங்கத் தலைவர் லேடி ராமராவ், இந்தியப் பிரதிநிதி டாக்டர் ஆர். பி. சூவைல, நேப்பாளப் பிரதிநிதி சுசிலா தாபா, காப்பூல் சுகாதார அமைச்சின் டாக்டர் ஹாவார் அஸீஸ், யாழ். சுகாதார சேவை உதவி அத்தியட்சகர் டாக்டர் எஸ். இராசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர். (கு. நி.)

## முதல் உதவி சிகிச்சை வகுப்பு

கொக்குவில், வியாழன்

மத்திய கொக்குவில் அரசாங்க தையல் நிலையத்தில் தையல் பயிற்சியோடுமாதர்கள் முன்னேற்றச்சங்கத்துக்குரிய பலவித பயிற்சிகளும் அளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

தற்பொழுது தையல்நிலையத்தில் அமெரிக்க சமாதான தொண்டர் குழுவைச் சேர்ந்த திரு. டெனிஸ்காட்ஸ் மனால் முதல்உதவி சிகிச்சை வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகுப்புகளில் மாதர்களும் பல தையல் நிலையங்களின் மாணவிகளும் ஆர்வம்காட்டிவருகிறார்கள். இதற்கான ஏற்பாடுகளை தையற்கலை மேற்பார்வையாளரும் தையல்நிலையப் பொறுப்பதிகாரியும் மேற்கொண்டுள்ளனர்.

## 4 நாட்களாக அறிவிழந்தநிலையில்

யாழ்ப்பாணம், வெள்ளி

பரந்தனில் நடைபெற்ற கார் விபத்தொன்றில் படுகாயமடைந்த ஒருவர் நான்கு நாட்களாகியும் அறிவிழந்த நிலையிலேயே இருக்கின்றார்.

காயமடைந்த விஜயரத்தினம் [40 வயது] சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் பரந்தனில் காரொன்றினால் மோதுண்டதாகவும், பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (கா. நி

## நாடும் நடப்பும்

யாழ்ப்பாண நகரிலுள்ள ஏ. எஸ். சங்கரப்பிள்ளை கடையில் ஒரு கொத்து நல்ல நாட்டரிசி ஒரு ரூபாய் பத்துசதத்துக்கு கிடைக்கிறது.

ஒரு ரூபாய் பத்துசதத்துக்கு நாட்டரிசி கிடைக்கிறது என்று கேள்விப்பட்டதும் அங்கு சென்று ஒரு கொத்து அரிசிவாங்கினேன். அளவு சரியாக இருக்குமோ, என்ற சந்தேகம். அரிசியை வாங்கிக்கொண்டு வந்ததும் எனது சகாக்கள் அரிசி நல்லதா என்பதைப் பார்ப்பதற்காக ஆளுக்குக் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக்கொண்டார்கள். அளவு சரியாக இருக்கிறதாஎன்று எப்படிப்பார்ப்பது? என்றாலும் அளந்து பார்த்தேன். பால் பேணியால் நான்கு சுண்டுகளுக்கு ஒருபிடி குறைவாக இருந்தது. நண்பர்கள் வாயில் போட்டுக்கொண்ட அரிசி ஒரு பிடியா?

அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டதும் இரண்டேகால் ரூபாய்வரை ஒரு கொத்து அரிசியின்விலை ஏறியது. இப்போதும்கூட பல இடங்களிலும் ஒரு கொத்துஅரிசி ஒன்றரை ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது. ஆனால் ஒரு ரூபா பத்துசதத்துக்கு ஒரு கடையில் அரிசிகிடைத்தால் மற்றும் இடங்களிலும் அரிசி விலைகுறையக்கூடும்.

அறுவடை முடிந்துள்ள சமயமாதலால் விவசாயிகள்தங்களது பணத்தேவைக்காக நெல்லைவிற்கின்றனர். இதுதவிர அரசாங்கமும் மலிவுவிலையில் அரிசிவிற்கப் போவதாக செய்திகள்வெளிவந்தன. இதன்பயனாகத்தான் அரிசிவிலை குறையத் தொடங்கியிருக்கிறது போலும்.

⁂ ⁂

பாரதியார்புதுமைப் பெண் பற்றிப் பாடியிருக்கிறாரல்லவா! அப்படியொரு புதுமைப் பெண் நம்நாட்டிலிருக்கிறார். நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டும். 'பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்பாரினில் பெண்கள் நடாத்த வந்தோம்' என்பது பாரதியாரின் புதுமைப்பெண் கூறியது. நமது நாட்டிலுள்ள புதுமைப்பெண் இவற்றை நடாத்தியிருக்கிறார். இப்பொழுது அவர் நம்நாட்டுப் பெண்களை புதுமைப்பெண்களாக்க மட்டுமல்லாது புரட்சிப்பெண்களாக்கவும் முன்வந்திருக்கிறார். யார் அந்தப் பெண்? அவர் வேறுயாருமல்ல. முன்னைய பிரதமரும் இன்றையஎதிர்க்கட்சித்தலைவருமான சிறிமா அம்மையார்தான்.

அவர் சில தினங்களுக்கு முன் மாதர் மகாநாடொன்றுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் "மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட இன்றைய அரசாங்கத்தை சுதந்திர வாக்குகளால் வீழ்த்தவேண்டுமென்றும் இல்லையேல் ஆயுதந்தாங்கியாவது அதை அகற்ற பெண்கள் முன்வர வேண்டுமென்றும் 'போர்க்'குரல் எழுப்பியிருக்கிறார். அவர் வீரம் வாழ்க!

—ஊர்சுற்றி

## திருவடிநிலை தீர்த்தம்

சுழிபுரம், வியாழன்

பொன்னாலைக் கிருஷ்ணன் கோவில் இலட்சார்ச்சனை தீர்த்த வைபவம் திருவடிநிலை தீர்த்தக் கரையில் இன்று அதிகாலை நடைபெற்றன. நூற்றுக் கணக்கான மக்கள் தீர்த்தமாடினர். சுவாமி தீர்த்தக் கரைக்கு கொண்டு வரப்பட்டு தீர்த்தம் ஆடிய பின்னர் கோவிலுக்கு கொண்டு செல்லப்பட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண புதிய சமாதான மாநாடு

## நாஸருக்கு அனுப்பிய செய்தியில் டிட்டோ தெரிவிக்கும் ஆலோசனை

பெல்கிரேட், மார்ச் 14

யூகோஸ்லாவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ உலகநெருக்கடிப் பிரச்னைகளையிட்டு விவாதிக்கச் சமாதான மாநாடொன்றை அழைக்க வேண்டுமென்ற ஆலோசனையை, ஐக்கிய அரபுக்குடியரசு ஜனாதிபதி நாஸருக்கு அனுப்பியுள்ள தனிப்பட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த உத்தேச மாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கும் பிரச்னைகளில், வியட்னும் மேற்கு ஆசியாவும் முக்கிய இடம் வகிக்குமெனக் கூறப்பட்டுள்ளது.

இந்தச்சமாதான மாநாடு, கூட்டுச் சேராக்கொள்கை நாடுகள் மாநாட்டுக்குப் பதிலாக அமையக்கூடிய சக்திவாய்ந்த மாநாடொன்றாகத் திகழுமென டிட்டோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இத்தகைய பரந்த அடிப்படையில் ஒரு சமாதான மாநாட்டைக் கூட்டுவதன் நோக்கம், கூட்டுச்சேராக் கொள்கையுடைய நாடுகளைத் தவிர, மற்றும் நாடுகளையும், விசேஷமாக அமெரிக்கா பக்கம் சார்ந்துள்ள நாடுகளை, இந்த மாநாட்டுக்குக் கவர்ந்திழுப்பதேயாகும் என டிட்டோ குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஐ. நா. பொதுச் சபைக்கூட்டத் தொடருக்கும், நவம்பரில் நடக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கும் முன்னர், இச் சமாதான மாநாடு கூட்டப்படலாமெனத் தெரிகிறது.



## போலாந்தில் தொடர்ந்து மாணவர் ஆர்ப்பாட்டம்

வார்சோ, மார்ச் 14

போலாந்தின் தலைநகரான வார்சோவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து மற்றும் 3 நகரங்களில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

இராகிகோவ் என்னும் நகரில் நடந்த ஆர்ப்பாட்டங்களில், மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன.

வார்சோவில், 8000-க்கும் மேற்பட்ட மாணவர்கள், பொதுக் கூட்டம் நடத்தி, பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைக் கோரினர்.

வார்சோ பல்கலைக் கழகத்தில், ரஷ்ய எதிர்ப்பு வசனங்களடங்கிய 19-ம் நூற்றாண்டு நாடகமொன்றை அதிகாரிகள் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்தே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகியது என்பது வாசகர்கள் அறிந்ததே.

## அபிவிருத்திக் குறைவு பற்றி உலக வங்கித் தலைவர்

### செல்வ, வறிய நாடுகள் இரண்டுமே குற்றவாளிகள்

வாஷிங்டன், மார்ச் 14

உலக வங்கியின் தலைவர் பதவியிலிருந்து விரைவில் விலகவிருக்கும் திரு ஜோர்ஜ் வூட்ஸ், உலகின் இன்றைய அபிவிருத்தியின் திருப்தியற்ற நிலைக்குச் செல்வந்த நாடுகளையும், வறிய நாடுகளையும் ஒருங்கே குற்றஞ் சாட்டினார்.

செல்வமுள்ள நாடுகள், தமது சக்திக்கேற்ப அபிவிருத்திக்கு உதவத் தவறிவிட்ட அதே நேரத்தில், அபிவிருத்தியடையாத நாடுகள் தம்மை முன்னேற்றிக் கொள்ளப் போதிய முயற்சி செய்யவில்லை என்று திரு. வூட்ஸ் கூறியுள்ளார்.

சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் 10-வது வருடாந்த மாநாட்டில், தமது ஆரம்ப உரையை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் ஸ்திரமும், வெளிநாட்டுதவியும் தொடர்ந்து இருக்குமேயானால், எந்தவொரு அபிவிருத்தியடைந்து வரும் நாடும் பொருளாதார முன்னேற்றம் காண முடியுமென்றார் அவர்.

அபிவிருத்தியடைந்த நாடுகளை, அவற்றை விடக் குறைந்த அதிர்ஷ்டம் வாய்ந்த நாடுகளுக்கு அதிக அளவில் தொழில் நுட்ப, நிதியுதவி அளிக்குமாறு திரு. வூட்ஸ் கேட்டுக் கொண்டார்.

## துருக்கியில் 11 பேர் மரணம்

### வெள்ளம் காரணமாக

அங்காரா, மார்ச் 14

துருக்கியில், கடும் புயல் வெள்ளம் காரணமாகக் குறைந்தது 11 பேராவது உயிரிழந்துள்ளனர்.

ரயில் போக்குவரத்துத் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன. தலைநகரான அங்காராவில், தண்ணீர் விநியோகமும் பாதிக்கப்பட்டது.

## இடைக்கால தேர்தல்கள்

### காங்கிரஸ் ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 14

இந்திய ராஜ்யங்களான ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகியவற்றில் நடைபெறவிருக்கும் இடைக்காலத் தேர்தல்களில் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் நடவடிக்கைகள் பற்றி காங்கிரஸ் செயற் கமிட்டி இன்று கூடிவிவாதித்தது.

## செயற்கைக்கோள் தொடர்பு நிலையம்

மூனிச், மார்ச் 14

மேற்கு ஜெர்மனியில் பவேரியாவில் அமைந்துள்ள "ரெயிஸ்டிங்" என்னும் குக்கிராமம், சர்வதேச புகழ் பெற்றிருக்கிறது. செயற்கைக் கோள்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய ஜெர்மன் செய்தித் தொடர்பு நிலையம் இங்கு அமைந்துள்ளது. 100 அடி உயர சிமெந்து மேடையில் அமைந்துள்ள இந்த ராட்சத எஃகு கருவி, 1964-வருடம் முதல் செயற்கைக் கோள்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. இப்போது இருக்கும் செயற்கைக் கோள் தொடர்பு சாதனத்திற்கு அருகாமையில் திறந்த வெளியில் அதை விடப் பெரிய செயற்கைக் கோள் தொடர்பு கருவியை நிறுவ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

## ஆகாஷவாணியும் வானொலியும்

சென்னை, மார்ச் 14

அகிலஇந்திய வானொலித் தமிழ்ப் பிரிவின் ராஜ்ய சேவையில் மட்டுமின்றி மத்திய சேவையிலும் ஆகாஷவாணி என்ற சொல்லை நீக்கிவிட்டு 'வானொலி' என்ற பதத்தையே உபயோகிக்குமாறு தமிழக அரசாங்கம் மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## தெல்லிப்பளை கி.ச. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பளைக் கிராம சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் திரு. எம். எஸ். இராஜசிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன. அப்போது 8-ம் வட்டாரத்துக்கு திரு. நடராஜா வெற்றிவேலுவும், 9-ம் வட்டாரத்துக்கு திரு. கந்தையா செல்லையாவும் போட்டியின்றித் தெரியப்பட்டார்கள்.

ஏனைய 8 வட்டாரங்களிலும் போட்டியிடும் அபேட்சகர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்: திரு. ஏ நீக்கிளார், திரு. ஆர். ஜோசெப்.

2-ம் வட்டாரம்: திரு. ஜே. அன்ரனி லஸரஸ், திரு. எம. கந்தையா.

3-ம் வட்டாரம்: திரு. கே. பொன்னையா, திரு. வி. நாகராஜா, திரு. இ. நவசிங்கம்.

4-ம் வட்டாரம்: திரு. எம். நடுவிலான், திரு. அ. சின்னப்பு.

5-ம் வட்டாரம்: திரு. எஸ். கந்தையா, திரு. எஸ். பத்திநாதர். திரு. வி. திருநாவுக்கரசு.

6-ம் வட்டாரம்: திரு. வன்னியசிங்கம், விசுவநாதன், திரு. எஸ். கதிர்காமத்தம்பி.

7-ம் வட்டாரம்: திரு. எஸ். கந்தசாமி, திரு. த. செல்வரத்தினம், திரு. சா. சின்னத்துரை, திரு. கே. சிவராஜா.

10-ம் வட்டாரம்: திரு. செல்லத்தம்பி நாகலிங்கம் பிள்ளை, திரு. குலசேகரம் அடைக்கலமுத்து [கா. நி.]

## 'பிராணிகள் நண்பர்' ருக்மணி அருண்டேல்

புதுடில்லி, மார்ச் 14

புதுடில்லிராஜ்பவனத்தில் நேற்றுமுன்தினம் நடந்தஒரு எளிய நிகழ்ச்சியில் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் திருமதி ருக்மணி அருண்டேலுக்கு 1968-ம் ஆண்டுக்குரிய 'பிராணி மித்ரா' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்.

பிராணிகளிடம் அதிக அன்பு காட்டுபவருக்கு பிராணிகள் சங்கமொன்று வருடாவருடம் அளிக்கும் இப்பட்டம் 1966—67லும் திருமதி ருக்மணி அருண்டேலுக்கே அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அதை முன்னர் ஏற்க மறுத்துவிட்டார்.

இந்தப் பட்டம் ஒரு தங்கப்பதக்கமும் நற்சான்றிதழும் அடங்கியதாகும்.

பிரிட்டிஷ்

## பாஸ்போர்ட் வைத்திருப்போர்

### மலேஷியாவும் தடைவிதித்தது

கோலாலம்பூர், மார்ச்.14

பிரிட்டிஷ் பாஸ்போர்ட் வைத்துள்ளவர்களைத் தனது நாட்டினுள் அனுமதிக்கத் தடை விதிப்பதென மலேஷியாவும் முடிவு செய்துள்ளது. இந்தியாவும் பாகிஸ்தானும் இவ்விதம் முன்னதாகவே முடிவு செய்துள்ளது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

முதலாவது

## மொரிஷியஸ் பார்லிமெண்ட்

போர்ட்லூயி, மார்ச்.14

புதிதாகச் சுதந்திரமடைந்த மொரிஷியஸ் தீவின் முதலாவது பார்லிமெண்ட் நேற்று அதன் தலைநகரான போர்ட் லூயியில் கூடியது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த இரண்டு அங்கத்தவர்களைத் தவிர மற்ற அங்கத்தவர்கள் யாவரும் பார்லிமெண்ட் திறப்பு விழாவுக்கு சமுகமளித்திருந்தனர்.

சாம்ராஜ்ய நாடுகள் சங்கத்தின அங்கத்துவத்துக்கு மொரிஷியஸ் விண்ணப்பம் செய்யவிருப்பதாக அதன் கவர்னர் தெரிவித்தார்.

## தீவிரக்கட்சிகளுக்கு இளைஞர் ஆதரவில்லை

பொன், மார்ச் 14

ஜெர்மனியில் தீவிர அரசியல் கட்சிகளிடத்தில் இளைஞர்களுக்கு 'மோகம்' கிடையாது. சமீபத்தில் பிரீமன் மாநிலத் தேர்தலில் பதிவான வாக்குகளைக்கொண்டு கணக்கிடும் போது, இரு தீவிர அரசியல் கட்சிகளான தேசிய ஜனநாயகக் கட்சி (தீவிர வலதுசாரி)க்கும், ஜெர்மன் சம்பந்தமான யூனியன் (தீவிர இடதுசாரி)க்கும் 12.9 சத விகிதம் வாக்குகளே கிடைத்திருக்கின்றன. தீவிர அரசியல் கட்சிகளைக் கணிசமான அளவு பெண்களும் ஆதரிப்பதில்லை.

## 35 ஆபிரிக்கர்களுக்கு மரணதண்டனை விதிவிலக்கு

### ரொடீஷிய ஸ்மித் ஆட்சி மனமாற்றம்

சலிஸ்பரி, மார்ச் 14

ரொடீஷிய அரசாங்கம் மரணதண்டனை விதிக்கப்பட்ட 116 ஆபிரிக்கர்களில் 35 ஆபிரிக்கர்களுக்கு அத் தண்டனைகளிலிருந்து விலக்களித்துள்ளது.

இம்மாதம் மன்னிப்பு அளிக்கப்பட்ட 35 பேர் [illegible] கிழமையன்று தூக்கிலிட உத்தரவிடப்பட்டிருந்த 6 பேர்களில் நால்வர் அடங்கியுள்ளனர். மற்ற இருவரும் தூக்கிலிடப்பட்டனர்.

இன்னும் 35 பேர்களுக்கு மன்னிப்பு அளிப்பதுபற்றி ரொடீஷிய ஆட்சியாளர்கள் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளில்

இதற்கிடையில் தான்ஸானியாவில், ரொடீஷியாவுக்கெதிராகப் பலாத்காரம் பிரயோகிப்பதற்கு வேண்டிய செலவுகளுக்காக அங்குள்ள மாணவர்கள் நிதி ஒன்று திரட்ட ஆரம்பித்துள்ளனர்.

ஜமேக்காவின் அந்நாட்டுப் பிரதமர், ரொடீஷிய விவகாரத்தை விவாதிக்க சாம்ராஜ்ய பிரதமர்கள் மாநாடொன்று அழைக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு மாத சிறை
### ஜீவனாம்சம் கட்டாதவருக்கு

வல்வெட்டித்துறை, வியா.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த முத்தன் கனகன் என்பவர் தனது மூன்று பிள்ளைகளுக்குரிய நான்கு மாதச் ஜீவனாம்சப் பணமாக ரூபா 120 கட்டத்தவறிய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. வில்னராசாவால் நான்கு மாதச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## "வளர்ச்சிக்கு கல்வி அவசியம்"

உடுவில், வியாழன்

"நாட்டின் முன்னேற்றத்திற்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கும் மாணவர்களின் நல்வாழ்வுக்கும் ஊன்றுகோலாக விளங்குவது கல்வி. கல்வியை சிறந்தமுறையில் பயன்படுத்தி பழக்க வழக்கங்களையும் அதற்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ளல் அவசியம்"

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக தொழிற்பயிற்சி நிலயத்தில் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தொன்றில் பேசிய ஆசிரியர் திரு. வி. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

திருவாளர்கள் வி. பரிபூரணானந்தன், பொ. கமலநாதன், எஸ். நவரத்தினம் உட்பட பலரும் பேசினர்.

செல்வன் எஸ் அமிர்தநாதன் நன்றி தெரிவித்தார்.

## 'இழந்த உரிமையை மீட்க வழி'

சுழிபுரம், வியாழன்

"தனித்துநின்றும் பிரிந்துநின்றும் உரிமையைக்கேட்பது பலனளிக்கும் மார்க்கமாகாது. ஒருங்கு இரண்ட ஆசிரிய சமுதாயத்தின் சக்தியே அவர்களின் இழந்த உரிமையைக் கொடுக்கும்" என்று மேற்கு யாழ்ப்பாண ஆசிரிய சங்கத்தலைவர் திரு. கே. வைரமுத்து மேற்படி சங்கம் நடாத்திய பேச்சு இசைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளித்துப் பேசுகையில் கூறினர்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் 'இந்நாட்டுச் சிறுரின் பேச்சு இசை என்பனவற்றில் பிழைகளை பலஏதுக்கள் புகுத்தி விடுகின்றன. மரபு தவறியதும் இலக்கண வழு நிரம்பியதும், ஓசை திரிபு பெற்றதுமானமேடைப்பேச்சுகளும், சினிமாச் செல்வாக்கால் உருவாகும் மயக்க இசைகளும் நாட்டின் செல்வங்களான சிறுர்களைப் பெரிதும் பாதிக்கின்றன என்ருர்.

## இதுவரை இல்லை

பண்டத்தரிப்பு, வியாழன்

இளவாலை மாதகல் ஆகிய கிராமங்கள் மின்சாரப் பெறுவதற்காக முற்பணம் கட்டி ஒரு வருடத்திற்கு மேலாகியும் மின்சாரம்வழங்குவது பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது.

## உற்சவம்

பண்டத்தரிப்பு, வியா.

புனித சூசையப்பரின் திருநாள் இம்மாதம் 19-ம் திகதி கொண்டாடப் படவிருக்கிறது. அதற்காயத்தமாக சூசையப்பரின் நாமம் கொண்ட ஆலயங்களில் நவநாட்கள் ஆரம்பமாகிநடை பெற்றுவருகின்றன.

## தொல்லை

பண்டத்தரிப்பு, வியா.

அறுவடைக்குப் பின் ஆர்வத்துடன் உப உணவுச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் கட்டாக்

## இம்முறை உருளைக்கிழங்கு செய்கை

அனலைதீவு, வியா.

அனலைதீவு கமக்காரர்கள் பலர் பரீட்சார்த்தமாக உருளைக்கிழங்குச் செய்கையில் இம்முறை ஈடுபட்டுள்ளார்கள். சென்ற வருடங்களில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட இவ்வூர் மக்கள் காசுப் பொருளான புகையிலையை விட்டு மிளகாய் செய்கை, உருளைக்கிழங்குச் செய்கை முதலியனவற்றில் ஈடுபட்டுள்ளார்கள்.

## ஞானவொடுக்கம்

பண்டத்தரிப்பு, வியா.

நெடுந்தீவு புனித ஸ்தாபக அருளப்பர் கோவிலில் தபசுகால ஞானவொடுக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. வெண்ணப்புவ 'நசரேத்' இல்லத்தைச் சேர்ந்த வண. எம். ஜே. அல்பிரட் சுவாமியார் ஞானவொடுக்க போதகம் செய்து வருகிருர்.

## "கர்நாடக இசை புனிதக்கலை"

உடுப்பிட்டி, வியா,

"கர்நாடக இசையைத் தெலுங்கிந்தியர்கள் தென்னிந்தியக்கலை எனப்போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். ஈழத்தவர்கள் புனிதமான கலையாகப் போற்றுகின்றனர். கர்நாடக இசை எந்தநாட்டிற்கும் உரிமையானதல்ல. தமிழினம் முழுவதற்கும் சொந்தமானது. இக்கலை தெய்வீகத்தன்மை பொருந்தி விளங்குவதால் பிறநாட்டவரும் கர்நாடக இசையில் ஆர்வம் காட்டுகின்றனர். வடமராட்சியில் முன்னரைவிட இப்பொழுது சங்கீதத்துறை பெரிதும் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. பெண்மைக்கு அழகூட்டுவது இசையேயாகும்."

இவ்வாறு வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரால் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பேச்சு, இசைப்போட்டிப் பரிசளிப்பு விழாவில் தலைமை வகித்துப்பேசிய வதிரி திரு இருதயக்கல்லூரி அதிபர் திரு. நடராசா கூறினர். நெல்லியடி ம. ம. வித்தியாலய அதிபர் திரு. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்குத் திருமதி சிவசிதம்பரம் சான்றுப் பத்திரங்களை வழங்கினர்.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வியா.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் சார்ஜண்ட் திரு. பீற்றர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கும், மன்னர் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சார்ஜண்ட் திரு. சந்தியாப்பிள்ளை பருத்தித்துறை பொலிஸ் நிலயத்திற்கும் இம்மாதம் 15-ந் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஆபிரிக்க நாடுகள் பகிஷ்கரிப்பு

லியூஸான், மார்ச் 14

சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக் கமிட்டியின் நிர்வாகக் குழு, தென்னாபிரிக்காவை இவ்வருட ஒலிம்பிக் விளையாட்டுகளில் அனுமதிப்பதென்பதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளின் பகிஷ்கரிப்பு நிலைமையை இங்கு கூடி ஆராயவிருக்கிறது.

[illegible] பெரிதும் அச்சமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

## உடற்பயிற்சிப் போட்டி

உடுப்பிட்டி, வியா.

இம்மாதம் 16-ந்திகதி உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும், பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப்போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் நடைபெறவிருக்கின்றன.

## கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

காங்கேசன்துறை, வியா.

தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஆறுவது தடவையாக நடைபெறவிருக்கும் கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்தமாதம் 11-ம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது. பங்குபற்றும் விளையாட்டுக் கழகங்களிடமிருந்து இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கைப்பந்தாட்டப்போட்டிகள் தையிட்டி ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் 4-15மணிக்கு ஆரம்பமாகும்.



## வடபகுதி சித்திர வித்தியாதிகாரியாக நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலி ஆறுமுக சிறுபாலயத்தின் தலைவர் கலாகேசரி தம்பித்துரை வடமாநில சித்திர வித்தியாதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். இவர் சிற்பாசாரியார் திரு. வி. ஆறுமுகத்தின் புதல்வராவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சித்திர ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் பரமேஸ்வராக்கல்லூரி பழைய மாணவராவர். [கா. நி]

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### வெள்ளி 15-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 பண்ணிசைத்தமிழ், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்பஇசை.

இரவு 6-15 பஜனை, 6-45 [illegible]வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர்கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 [illegible], 9-45 [illegible], 10-15 [illegible]

# கோப்பாய் வட்டார உடற்பயிற்சிப்போட்டி
## உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை முதலிடம்

உரும்பராய், வியாழன்

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் "பி" பிரிவில் பங்கு பற்றிய 13 வயதுக் குட்பட்ட ஆண்கள் குழுவில், உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

சென்ற வாரம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இதே பாடசாலையைச் சேர்ந்த மாணவிகள் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

கடந்த ஆண்டிலும் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பெண்கள் பிரிவுகளில் இதே பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும், மாணவியருமே முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீ வைத்தாராம் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

தந்தையின் வீட்டுக்குத் தீ வைத்தாரென்ற சந்தேகத்தின் பேரில் மகன் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இச் சம்பவம் ஆனைக்கோட்டைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது.

கைது செய்யப்பட்டவர் அரசாங்க ஊழியராகவிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டவரென்றும், இவர் சித்த சுவாதீனமானவராக இருக்கலாமென்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார் (கா. நி.)

## நன்கொடை வழங்குக

சுழிபுரம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கலாச்சார ஸ்தாபனங்களுக்குக் கலாச்சார அமைச்சு வழங்கிவரும் நன்கொடைப்பணம் கடந்த வருடம் கிடைக்காமை குறித்து வட இலங்கை கிராமியக் கலைக்கழகம் கலாச்சார அமைச்சுக்கு முறையிட்டுள்ளது. கலைப்பணி புரியும் ஸ்தாபனங்களுக்குத் தொடர்ந்து நன்கொடை உதவியளிக்குமாறு பிரஸ்தாப கழகம் கலாச்சார அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## களவுபோன உதிரிப்பாகங்கள்
### மாஜிக் கான்ஸ்டபிள் வீட்டில்

குரும்பசிட்டி, வியாழன்

களவுபோன பைசிக்கிள் உதிரிப்பாகங்கள் மாஜிப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் வீட்டிலிருந்து சுன்னுகம் பொலிசாரினுல்கண்டெடுக்கப்பட்ட சம்பவம் குப்பிளான் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

தகவல் கிடைத்ததன்பேரில் இன்ஸ்பெக்டர் ஆர். ஏ. ஜேக்கப்தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி மாஜிப் பொலிஸ் கான்ஸ்டபிளான கந்தையா இராசையா என்பவரது வீட்டில் திடீர் சோதனை நடாத்தியபோது திருடப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள் பெருமளவில் கைப்பற்றியது. இது சம்பந்தமான விசாரணையின் போது இதற்கு உடந்தையாக சின்னத்தம்பி ஞானலிங்கம் என்ற மற்ருெரு நபரும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் மீது இரு நபர்களையும் பொலிசார் கைது செய்தனர்,

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் பிரஸ்தாப இருவரும் சுன்னுகம் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## சி. பி. டி. வருவார்

நல்லூர், வியாழன்

காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா அடுத்த மாதம் 2-ம், 3-ம் திகதிகளில் விசுவமடுக் குளத் திட்டத்துக்கும், மற்றும் சில பகுதிகளுக்கும் விஜயம் செய்யவிருக்கிருர். குடியேற்றத் திட்டங்களைப் பார்வையிட்டு, குறைகளை நேரில் தெரிந்து நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பார்.

## பாராட்ட ஏற்பாடுகள்

புன்னாலைக்கட்டுவன், வியா

உப்சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்துக்கு அவரது தொகுதியில் வரவேற்புக் கூட்டம் ஒன்று நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இதைத்தொடர்ந்து யாழ்ப்பாணம், காங்கேசன்துறை கோப்பாய் உட்பட பல தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர் பாராட்டுக் கூட்டங்கள் நடத்தவிருப்பதாகத் தெரிகிறது.

## கலைமன்ற நிர்வாகிகள்

சுழிபுரம், வியாழன்

வட்டுக்கோட்டைத் தொகுதி வர்த்தககலைமன்ற அங்குரார்ப்பணக் கூட்டம் சுழிபுரம் நூலகமண்டபத்தில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. சீனிவாசகம், உபதலைவர்- திரு. கே. பஞ்சநாதன், இணைச்செயலாளர்கள்- திரு. க. இந்திரராசா, திரு. சி. அருணசலம், தனாதிகாரி- திரு. செ. பேமின்பநாயகம், உபதனாதிகாரி- திரு. வி. கதிரவேலு. ஐந்து பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## "வளவள" பேச்சு வேண்டாம்

பொன், மார்ச் 14

பாராளுமன்றத்தையும் பொது அரசியல் மேடையாகக் கருதி, சில உறுப்பினர்கள் "வளவள" என்று பேசுவது வழக்கம். இதற்கு முற்றுப் புள்ளி வைக்க மேற்கு ஜெர்மனி பாராளுமன்ற நடவடிக்கை ஆலோசனைக் குழு முடிவு செய்திருக்கிறது. இனிமேல் உறுப்பினர்கள், முன் கூட்டியே தயாரித்த பேச்சுத் தாள்களை, கையில் வைத்துக் கொண்டு "வளவள" என்று பேசக்கூடாது எழுதிப் படிக்காமல் ஒலிபெருக்கி முன் சுருக்கமாகப் பேச வேண்டும். முக்கியமான அரசியல் விவகாரங்களில் மட்டும் எழுதி வைத்துப் படிக்கலாம் என்றும் விதிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## கல்வி

இசைவகுப்பு:
எக்கோடியன்—கிட்டார், மிருதங்கம், மென்டோலின் முதலிய வாத்தியபயிற்சி அளிக்கப்பெறும். நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ், 23, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம். 1602

பரீட்சை
திரு.வே. சிவக்கொழுந்து அவர்களால் தயாரிக்கப் பெற்ற [1] ஆறும் வகுப்பு மாதிரிப் பரீட்சைப் பதிரம்— 6 பாடங்களில் ஒரு செற் 50 சதம். 10 செற் ரூபா 3-00. [2] மாணவர் தேர்ச்சி அறிக்கை 100க்கு வெள்ளை ரூபா 10-00, லெஜர் ரூபா 12-00, பிறிஸ்டல் ரூபா 15-00, புத்தகரூபம் ரூபா 30-00 முற்பணம் அனுப்பி விண்ணப்பிக்குக. உரிமையாளர்- கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 1607

மாதிரிகை விஞத்தாள்கள்:
ஆறும் வகுப்பு முதலாம் பருவப் பரீட்சை மாதிரிகை விஞத்தாள்கள் எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனி கிடைக்கும். ஆசீர்வாதம் புத்தகசாலை, கண்டி வீதி, (கிளை: 61, பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம். 1606

## விற்பனைக்கு

காணி
நல்லூர் கோவிலுக்கு முன்னுள் பருத்தித்துறை வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்: திருமதி மகாலிங்கம், சுதுமலை சந்தி. மானிப்பாய். 1609

17-3-68 ஞாயிற்றுக் கிழமை பகல் 10-30 மணியளவில், வலிகாமம் வடக்குப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தெல்லிப்பளை மொத்தநிலையத்தில் ஏராளமான வெற்றுச் சாக்குகள், கழிவு சீனி, வேறு பொருள்கள், லொறி ரையர், ரியூப் முதலியன விற்கப்பப்படும். இங்ஙனம் கூட்டுறவு சேவையிலுள்ள க. இராமச்சந்திரன், நிர்வாகக் காரியதரிசி. 1601

கெல்விநேற்றர் (Kelvintor) குளிர் சாதனப் பெட்டி புத்தம் புதிய நிலையில் விற்பனைக்குண்டு. - இலங்கை நிரப்பு நிலையம், நல்லூர் சந்தை, யாழ்ப்பாணம். 1605

## தவறிவிட்டது

கறுப்பு பிறேமுள்ள மூக்குக் கண்ணுடி 10-ந் திகதி தவறி விட்டது. கண்டெடுத்தவர் ஈழநாட்டுக் காரியாலயத்தில் கொடுக்கவும், சன்மானம் வழங்கப்படும். நன்றி. 1608

## விற்பனைக்கு

காணி:
பண்டத்தரிப்பு பத்திமாமாதா கோவிலுக்கருகாமையில் பலவிதமான பயிர்களும் உண்டாக்கப்பட்டிருக்கும் 'நெடுங்கண்ணி' என்னும் காணி 100 பரப்பு- உரிமையாளர் - பயஸ் பிரான்சிஸ்பிள்ளை, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 1799

## பார்வையிட்டார்

அனலைதீவு, வியா.
அனலைதீவு, நயினதீவு, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்குக் கிராமவேலை அதிகாரி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் நேரில் சென்று பார்வையிட்டார்.

செப்பனிடப்படும் வீதிகள், புதிய வீதிகள், ஒழுங்கைகள், கிணறுகள் முதலியனவற்றைப் பார்வையிட்டார்.

## நூல் வெளியீடு

மானிப்பாய், விசேமுன்
திரு. பொ. சண்முகநாதனின் வெள்ளரிவண்டி என்னும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா இம்மாதம் 20-ம் திகதி மாலை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கவிஞர் அம்பியின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## விவசாய படைக்கு அழைப்பு

பண்டத்தரிப்பு, விசே.
கடந்தவருடம் ஆகஸ்ட் மாதத்தில் பண்டத்தரிப்பு பகுதிகளிலிருந்து விவசாயப்படைக்கு விண்ணப்பித்து நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இளைஞருக்கு மேற்படி படையில் சேர இப்போது அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

## யாருடையது?

எஸ். மாணிக்கராசா என்பவரினுல் சாரணர் வேலை அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## கடத்தலை முறியடிக்கச் சென்ற பொலிசார் ஏமாற்றம்

குரும்பசிட்டி, விசேமுன்
கடத்தல் முயற்சியை முறியடித்து கைது செய்ய ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸ் கோஷ்டி மோட்டார் படகு வசதி கிடைக்க ஏற்பட்ட சுணக்கத்தால் ஏமாற்றமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது!

இந்தியாவிலிருந்து கடத்தல் பொருட்களுடன் வந்த படகு ஒன்றிலிருந்து சாமான்களைக் கட்டுமரத்தில் ஏற்றி பரிமாற்றம் செய்துகொண்டிருப்பதாக காங்கேசன்துறைப் பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இன்ஸ்பெக்டர் வீ. செல்லையா தலைமையில் பொலிஸ்கோஷ்டி உடனே சம்பவம் நடைபெற்ற இடமான மயிலிட்டிக் கடற்கரைக்கு விரைந்தது. கடற்கரையிலிருந்து சுமார் நான்கு மைல் தொலையில் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின்படி 'காரியம்' நடைபெற்றுக்கொண்டிருந்ததைப் பொலிசார் அவதானித்தனராம்.

உதவிப் பொலிஸ் சுப்ரிண்டெண்டுக்கு செய்தி கொடுக்கப்பட்டதும் அவர் காரைநகர் விரைந்து கடற்படை படகு ஒன்றின் மூலம் சென்று சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்திற்குச் சென்றூர். பொலிசார் படகில் வந்துகொண்டிருந்ததைக் கண்டதும் கடத்தல் கோஷ்டி பொருட்களை கடலில் வீசிவிட்டனராம். பொலிசார் ஏமாற்றத்துடன் எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாதவாறு வெறுமனே படகும் கட்டுமரமும் சில நபர்களுமே காணப்பட்டனராம்.

பெரிய ஒரு கடத்தல் முயற்சி படகு வசதிக் குறைவினுல் கைது செய்யப்பட முடியாது போய்விட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினூர். கடத்தல் வேலைகளைத் தடுக்க அரசாங்கம் வழங்கியிருந்த மோட்டார் படகு பழுதடைந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண மாநகரசபை சோலைவரி 1-ம் கந்தாயம் 1968

1968-ம் ஆண்டு 1-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10% வெலியாதுப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக் கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன மாநகர சபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 31-3-68-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் மாநகர சபை அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும் பொழுது, வீட்டு இலக்கம், தெருப் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

கட்சன் செல்வராசா
மாநகரசபை ஆணையாளர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
8-3-68. 490

## ஆலோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி
பெருமாள் கோவிலடி நெசவாளர் ஒத்துழைப்புச் சங்கத்திற்கு மின் சக்தியால் இயங்கும் தறிகள் நிறுவுவது சம்பந்தமாக இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சங்க காரியாலயத்திற்கு விஜயம் செய்வார்.


# விவசாயிகளுக்கு அறிவித்தல்

BAYER

இன்றைக்கே பாவியுங்கள்

பொலிடோல் — சர்வ பூச்சிநாசினி

உருளைக்கிழங்கு — வெளிறல் அல்லது வாடல் நோய்க்கு அன்றக் கோவ தந்துகுத்தி. ஆனைப்பேன் ஆகிய பூச்சி புழுக்களை அழிக்க பொலிடோல் அல்லது மெற்றசிஸ்டொக்ஸ்

வெங்காயம் — பனிப்பூச்சி அழிக்க பொலிடோல் அல்லது பொலித்தியோன் களை கட்டடக்தல் களைகொல்லி

கத்தரி — ஆகிய மற்றும் பயிர்களை அழிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களை கட்டுப்படுத்த பொலிடோல் அல்லது மெற்றசிஸ்டொக்ஸ் அல்லது பொலித்தியோன் பாவிக்கலாம்.

கிடைக்கும் இடங்கள்:

'புறேவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ்'
ஓட்டோஸ் கட்டிடம்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 244 & 628

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: "504"

82வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

2-வது மாதம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த
மறக்க முடியுமா?

REGAL JAFFNA
Daily at
4-40, -700, & 9-45 p.m
Elvis Presley &
Yvonne Romain
In
DOUBLE TROUBLE

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45p.m
Jane Fonda, Jason Robards,
Deanones
in
Any Wednesday

இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை யாழ். வரும் சபாநாயகர் ஷேர்லி

யாழ்ப்பாணம், வெள்ளி சபாநாயகரும், சிலாபம் தொகுதி எம். பி.யுமான திரு. ஷேர்லி கொரியா நாளை விமானத்தில் யாழ்ப்பாணம் வருகிறார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்வதற்காகவே சபாநாயகர் யாழ். நகர் விஜயம் செய்கின்றார். பலாலி விமானநிலையத்தில் வைத்து மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. வேரிணன் அபயசேகரா, தமிழ்ப்பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர்தரஅரசாங்க அதிகாரிகள், நீதிபரிபாலன உயர்தர அரசாங்க அதிகாரிகள், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் திரு. ஷேர்லி கொரியாவை உத்தியோகபூர்வமான முறையில் வரவேற்பர்.

சபாநாயகர் மறுதினம் கொழும்பு திரும்புவார் எனத் தெரிகிறது. சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டபின்னர் திரு. கொரியா யாழ்ப்பாணம் வருவது இதுவே முதற் தடவையாகும். (கு. நி)

## காங்கேசன்துறையில்...

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

சென்ற வருடம் காலியில் ரூபா 1, 44, 18900மும் காங்கேசன்துறையில் ரூபா 12, 98, 3, 400க்கும் விற்பனவு நடைபெற்றுள்ளது. சென்ற வருடம் 152235 தொன் நிறையுள்ள 30,44,700 பைக்கட் சீமெந்தை இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம் உற்பத்தி செய்துள்ளது. 152235 தொன்நிறையுள்ள கிளிங்கரில் 80105 தொன் நிறையுள்ள 'கிளிங்கரை' காலி தொழிற்சாலைக்கும் 72130 தொன் நிறையுள்ள 'கிளிங்கரை' காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையிலும் அடைத்து விற்கப்பட்டுள்ளது.

சராசரி ஒரு மாதத்தில் ரூபா 10,80,000 க்கு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் மட்டும் விற்பனையாகிறது.

காங்கேசன்துறையில் தற்பொழுது 600 தொன் சூளை வேலை நடைபெற்று வருகிறது. செப்டம்பர் மாதத்தில் 400 தொன் சூளையும் கூடுதலாக வேலை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை 1970-ல் சீமெந்து உற்பத்தியை ஆரம்பிக்குமெனவும் அங்கு 600 தொன் சூளை வேலை ஆரம்பமாகுமெனசீமெந்துக் கூட்டுத்தாபன உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காலியில் அரைத்தல், அடைத்தல் பொறித்தொகுதிமட்டும் நடைபெற்றுவருகிறது.

1950-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இன்னும் சுமார் 20 ஆண்டுகளுக்கு தேவையான கல் எடுக்கலாமெனவும் புத்தளத்தில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைக்கு சுமார் 35 வருடங்களுக்குத் தேவையான கல் எடுக்கலாமெனவும் காலியில் கல் எடுக்க முடியாதெனவும் தெரியவருகிறது. காலியில் இங்கிருந்து செல்லும் கிளிங்கரை அரைத்து அடைத்து முடிக்கும் வேலை தான் நடைபெறுகிறது.

புகையிரத மூலம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்ல தொன் ஒன்றுக்கு 31 ரூபா 28 சதம் செலவாகிறது.

## யாழ். ......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருந்தத்தக்கதாகும். விபுலானந்த அடிகளே யாழ்ப்பாணத்துக்கு ஒரு சர்வகலாசாலை அவசியம் தேவை என்று அன்றே சொன்னார். நாவலர் பெருமான் பிறந்த யாழ்ப்பாணத்தில் இராமநாதன் பெரியார் விட்டுச் சென்ற செல்வங்களிருக்கையில் இன்னும் ஒரு சர்வகலாசாலை அமைப்படாதிருப்பது எம்மிடையே உள்ள ஒற்றுமையின்மையையே காட்டுகின்றது. இனியுங்காலம் தாழ்த்தாது தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று பட்டு இங்கு ஒரு சர்வகலாசாலையை கூடிய விரைவில் நிறுவ முன்வரவேண்டும்.

சிவபதமடைந்த ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தஜியின் திருவுருவப் படத்தை வடபகுதி முன்னாள் வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி, ஸ்ரீமத் சுவாமி ரெங்கானந்தஜி. முதலியார் செ. முத்துத்தம்பி ஆகியோரும் பேசினார்கள். கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனம், கோஷ்டி நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [கா. நி.]


### மெக்கானிக் பாடங்கள்

29-3-68 முதல் நான்காவது மோட்டார் டிராக்டர், டீசல் மெக்கானிக் பாடங்களும் பயிற்சிகளும் விவேகசாரதிப்பயிற்சிகளும் நவீன முறையில் போதிக்கப்படும். விபரங்களுக்கு உடன்நேரில் தொடர்பு கொள்ளவும். அதிபர் ஸ்ரீராஜ் ஓட்டோ மொபைல் எஞ்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக் மாளிகை, மேல்மாடி. 11/B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1610


## கச்சதீவு கட்டண உயர்வு

நல்லூர், வெள்ளி யாழ்ப்பாணத்திலிருந்து கச்சதீவுக்கு திருநாளைக் கொண்டாட இம்மாதம் 24-ம் திகதி இங்கிருந்து செல்லும் யாத்திரிகர்கள் சென்ற வருடத்தைவிட 5 ரூபா கூடுதலாகச் செலுத்த வேண்டியிருக்குமெனத் தெரியவருகிறது. அதாவது போவதற்கும் வருவதற்குமாக ரூ. 20 செலவிடவேண்டியிருக்கும்.

இதற்கான காரணமெதுவும் தெரிவிக்கப்படவில்லை.

வழக்கமாக கச்சதீவு திருநாள் சமயங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து யாத்திரிகர்களை ஏற்றிச் செல்லும் வள்ளக்காரர் ஒருவர் இக்கட்டண உயர்வு பற்றித் தெரிவித்தார்.

இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து அல்லது ஊர்காவற்றுறையிலிருந்து கச்சதீவுக்கு செல்லும் பிரயாணிகள் மண்டைதீவில் தங்கி நிற்காது நேராக அங்கு செல்லவேண்டிய நிலையிருப்பதாலேயே இவ்விதம் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## அதிபர்களுக்கு மேலதிக அதிகாரம்

புன்னாலைக்கட்டுவன், வியா. புதிய கல்வித் திட்டத்தின்படி அதிபர்களுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள அதிகரிப்பு அதிபர்களின் சிபார்சிலேயே தங்கியிருக்குமென்றும், பாடசாலை ஊழியர் சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கையும் அவர்களின் பொறுப்பிலேயே விடப்படுமென்றும் தெரிகிறது. சில ஆசிரியர்கள் கல்வி போதிப்பதில் அலட்சியமாக இருப்பது பற்றிக் கல்விப் பகுதிக்குப் பல புகார்கள் சென்றுள்ளமையே இதற்குக் காரணம்என்றும்தெரிகிறது

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று காலையும் மாலையும் 5-30க்குபஜனையும் மாலை 6மணிமுதல் இரவு 7 மணிவரை பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவால் சிவனருட் செல்வர் என்னும் தொடரில் ''என்னப்பன் கண்ணப்பன்'' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7மணி சுக்கிரவார அம்மன் உற்சவமும், இரவு8 மணிக்கு அர்த்த ஜாமப் பூசையும் நடைபெறும்.

## நாடகப் போட்டி

சுழிபுரம், புதன் வட இலங்கைக் கிராமியக் கலைக் கழகம் நடாத்தும்நாடகப் போட்டி அடுத்த மாத மத்தியில் நடைபெறவிருக்கின்றன. இப்போட்டி நடைபெறுவதற்கான சகல ஒழுங்குகளையும் போட்டி அமைப்பாளர் திரு. கே. எஸ். ஆனந்தன் கவனித்து வருகின்றார். இப் போட்டியில் வட இலங்கையிலுள்ள, நாடக மன்றங்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் கல்லூரிக் கழகங்கள் ஏனைய ஸ்தாபனங்கள் அனைத்தும் கலந்து கொள்ளவிருக்கின்றன,

## 'நிவாரணம் வழங்குக!'

ஊர்காவற்றுறை, புதன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வேலணை மக்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் கஷ்டமடைகிறார்கள். உடன் நிவாரணம் வழங்கும்படி ... இ. டி. ம. சங்கம் மாவட்ட அதிபரைக் கேட்டுள்ளது.

## மக்கள் குறை

கிளிநொச்சி,வியாழன் கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த கிளாலி என்னும் கிராமத்தில் தபாற் கந்தோரேனும் இல்லாததால் இங்குள்ள மக்கள் பிற இடங்களுக்குத் தபால் அனுப்புவதில் கஷ்டமடைந்து வருகிறார்கள். எழுதுமட்டுவாளிலிருந்து மூன்று மைல்களுக்கு அப்பாலிருக்கும் இக் கிராமத்தில் 100க்கு மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

# நான்குலட்சம்போலி ஜவுளிக் கூப்பன்கள் அகப்பட்டன

கொழும்பு, வியா. 106, 110-ம் இலக்க மோசடி ஜவுளிக்கூப்பன்களைப்பெருமளவில் ஒரு பஸ்ஸிலிருந்து பொலிசார் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பஸ்வண்டியை, பொலிசார் திடீர்ச்சோதனை செய்தனர். அப்போது அங்கு பொருள்களை வைக்கும்இடத்திலிருந்த ஒருபெட்டி பொலிசாரின் கண்களில்பட்டது. அப்பெட்டிக்குள் 4, 17, 440 போலி ஜவுளிக்கூப்பன்கள் இருக்கக்காணப்பட்டன. இதற்கு பிரயாணிகள் எவரும் உரிமை கோரவில்லை. இப்போது அவை பொலிஸ் பாதுகாப்பிலிருக்கின்றன.

# தமிழ் பல்கலைக்கழகம் புதிய நிர்வாகிகள்

மருதானை, வியாழன் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் புதிய தலைவரான முன்னாள் மாவட்ட நீதவான் திரு. என். கிருஷ்ணதாசன் தெரிவசெய்யப்பட்டிருக்கின்றார்.

முன்னாள் தலைவர் பேராசிரியர் ஏ. சின்னத்தம்பியின் பெயர் மீண்டும் தலைவர் பதவிக்கு பிரேரிக்கப்படவில்லை. காரியதரிசி பதவிக்கு திட்ட, பொருளாதார அமைச்சைச் சேர்ந்த திரு. எஸ். செல்வரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர் இக்கூட்டத்தில் பிரசன்னமாய் இருக்கவில்லை.

ஏற்னவே காரியதரிசியாக இருந்தவரும் இவரே. தனாதிகாரியின் பதவி நிரப்பப்படவில்லை. முன்னாள் தனாதிகாரி திரு. சி. கந்தசாமியின் பெயர் மீண்டும் பிரேரிக்கப்படவில்லை.

திருக்கோணமலையில் தமிழ் பல்கலைக்கழக இயக்கத்துக்கு உரிமையான சொத்துக்களை விற்பனை செய்வது சம்பந்தமான விஷயம் கூட்டத்தில் விவாதிக்க எடுக்கப்பட்டபோது, போதிய அங்கத்தவர்கள் பிரசன்னமாக இருக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதன் பேரில் முடிவு ஏதும் எடுக்கப்படாமல் கூட்டம் ஒத்திப்போடப்பட்டது.

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| 42 Z 0411 | 22 W 0477 |
| 11 M 0486 | 04 L 0971 |
| 31 K 0930 | 26 S 0465 |
| 39 D 0117 | 49 U 0162 |
| 17 B 0692 | 12 U 0902 |
| 24 V 0793 | 06 J 0058 |
| 22 Y 0532 | 40 Q 0971 |
| 30 D 0749 | 10 R 0556 |
| 25 A 0858 | 42 T 0118 |
| 41 S 0621 | 26 L 0115 |
| 40 E 0109 | 25 D 0176 |
| 49 G 0100 | 32 P 0426 |
| 15 L 0946 | 27 W 0740 |
| 38 J 0658 | 06 W 0528 |
| 47 E 0309 | 26 L 0475 |
| 07 N 0875 | 03 Q 0368 |
| 48 U 0627 | 06 C 0127 |
| 36 J 0788 | 23 V 0541 |
| 34 T 0097 | 29 T 0245 |
| 21 R 0072 | 19 D 0613 |
| 18 S 0922 | 06 F 0374 |
| 21 Y 0439 | 29 Y 0636 |
| 45 L 0152 | 27 J 0644 |
| 10 D 0156 | 10 T 0834 |
| 07 N 0340 | 36 G 0935 |
| 35 H 0694 | 01 Q 0836 |
| 01 Y 0551 | 21 U 0518 |
| 17 U 0487 | 28 V 0195 |
| 13 K 0304 | 23 P 0456 |
| 20 S 0079 | 01 H 0234 |
| 47 B 0593 | 28 L 0201 |
| 08 J 0660 | 19 W 0330 |
| 09 A 0062 | 44 D 0669 |
| 29 E 0698 | 02 U 0729 |
| 28 B 0918 | 24 L 0755 |
| 50 R 0923 | 12 H 0407 |
| 36 L 0027 | 41 U 0858 |

[இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்.]

## அணு ஆயுத ......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாத நாடுகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதாகத் தாம் கருதவில்லையென்று திருமதி இந்திராகாந்தி கூறினார்.

### மந்திரி கருத்து

அணு ஆயுத பரவல்தடை ஒப்பந்தம் சம்பந்தமாக இந்திய மத்திய உதவி வெளிவிவகார மந்திரி திரு. பகத் சிங் குறிப்பிடுகையில் ஆயுத பரிகரணத்தை இலட்சியமாகக்கொண்ட எந்தவொரு அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தமும் அணு ஆயுத உற்பத்திசெய்யும்செய்யாத இரண்டுவகை நாடுகளையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒப்பந்தமாக அமைந்தாற்றான் அது உண்மையான பலனை அளிக்க முடியுமென்றார்.

## நோயாளர் கஷ்டம்

அனலைதீவு, புதன் அனலைதீவில் தரமான ஆங்கில வைத்தியசாலை இல்லை எனவும்தற்பொழுது இயங்கிவரும் வைத்தியசாலையும் கிராமசபைக் கட்டிடத்தில் இயங்கி வருவதாகவும்பலவருடங்களுக்கு முன்னர் அரசினரால் ஒதுக்கப்பட்ட பலாயிரக் கணக்கான ரூபாவை இதுவரை வைத்தியசாலைக் கட்டிட ஆக்கவேலையில் ஈடுபடுத்தப்படவில்லையெனவும் இதனால் இப்பகுதி நோயாளிகள் கஷ்டமுற வேண்டியுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிப் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கொழும்பு - அனலைதீவு வாலிபர் இயக்கம் தொடர்பு கொண்டிருந்தபோதிலும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லையாம். கட்டிடவேலை முடியும்வரை இடைக்கால நடவடிக்கையாக நயினாதீவில் கடமையாற்றும்பூரண தகைமை பெற்ற டாக்டரை வாரத்தில் 2,3 தினங்களாவது அனலைதீவுக்கு வருகைதர ஒழுங்கு செய்யுமாறு கொழும்பு அனலைதீவு வாலிபர் இயக்கம் சுகாதாரப் பகுதியினரைக் கேட்டுள்ளது.

## கல்வி குழப்ப...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

லிக்க மதத்தவர்கள் சில பாடசாலைகளை அரசினரிடம் கொடுக்காமல் வைத்திருந்தார்கள். நம்மவர்கள் சகல பாடசாலைகளையும் கொடுத்துவிட்டனர். இது கவலைக்குரிய விடயம். இதனால் தான் தமிழ்ப் பிள்ளைகளுக்காக தமிழ் பல்கலைக்கழகத்தைக் கேட்டோம். அதற்கும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.'' [அ நி]

## நியமனம்

முல்லைத்தீவு, வியாழன் முல்லைத்தீவு உதவி வைத்திய அதிகாரியாக டாக்டர் ஆர். நரேந்திரகுமார் நியமிக்கப் பட்டுள்ளார். முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியின் முதலாவது அப்போதிக்கரியாக திரு. அல்பிரட் பாலசுந்தரம் நியமனமாகி வந்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச் மாதம்15-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org